ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

लोकाचार्यैः परमकृपया मादृशेषु प्रणीताः
दृष्टाः काश्चिद्विमलकृतयः ज्ञानदानैकदक्षाः ।
सद्भ्यो लब्धा अमृतसरणिप्राप्तियोग्योपदेशाः
हीनस्तैस्तैः परशिवफलैस्त्वां भजेयाति खिन्नः ॥ ६ ॥

𑌲𑍋𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍈𑌃 𑌪𑌰𑌮𑌕𑍃𑌪𑌯𑌾 𑌮𑌾𑌦𑍃𑌶𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌾𑌃
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌮𑌲𑌕𑍃𑌤𑌯𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌾𑌨𑍈𑌕𑌦𑌕𑍍𑌷𑌾𑌃 ।
𑌸𑌦𑍍𑌭𑍍𑌯𑍋 𑌲𑌬𑍍𑌧𑌾 𑌅𑌮𑍃𑌤𑌸𑌰𑌣𑌿𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍍𑌯𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌃
𑌹𑍀𑌨𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍈𑌃 𑌪𑌰𑌶𑌿𑌵𑌫𑌲𑍈𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌭𑌜𑍇𑌯𑌾𑌤𑌿 𑌖𑌿𑌨𑍍𑌨𑌃 ।

லோகாசார்யாள் என்று பிரஸித்திபெற்றவர்களும் ஸ்ரீ பரமேசுவராவதாரபூதர்களாயும் விளங்கும் ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளால் எம்போன்றவர்களிடம் இயற்கையில் தமக்கிருக்கும் அதிகமான கருணையால் இயற்றப்பட்டனவும் மோக்ஷத்தைப் பெறுவதற்கு முக்கிய ஸாதனமான சிறந்த ஞானத்தையுண்டுபண்ணுவதில் அதிக சக்திபொருந்திய பரிசுத்தமான சில கிரந்தங்களும் என்னால் குருமுகமாக நன்கு கற்கப்பட்டிருக்கின்றன. பெரியோர்களிடமிருந்தும் மோக்ஷமார்க்கத்தைப்பெறுவதற்கு யோக்கியமானஉபதேசங்களும் அடையப்பட்டிருக்கின்றன. ஹே ஈசுவர! அவ்வைகளுக்குற்ற பலன்கள் மாத்திரம் என்னால் பெறமுடியவில்லை அதினால் அதிக மன வருத்தத்துடன் உம்மை இப்பொழுது சரணாகதியாக அடைகிறேன். அவச்யம் நீர் பாதுகாக்க வேண்டும்.

ஒரு பக்தர் ஸ்ரீ சந்திரமௌளியிடம் உமக்கு சிரமத்தைக் கொடுக்காமல் நாமாக உசிதமான ஸாதனங்களை அனுஷ்டித்து நற்கதி பெறவேண்டுமென்று எவ்வளவு முயற்சித்தும் பயன்படவில்லை. ஆகையால் நீர்தான் ரக்ஷிக்கவேண்டுமென்று அறிவிக்கிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
விபவ-௵ ஆனி-மீ ௧௨

# "உபதேசபஞ்சகம்"

(266-வது பக்கத்தொடர்ச்சி.)

आत्मेच्छा व्यवसीयताम् । 𑌆𑌤𑍍𑌮𑍇𑌚𑍍𑌛𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍀𑌯𑌤𑌾𑌮𑍍 ।

ஸச்சிதானந்த ஸ்வரூபமாய் விளங்கும் பரமாத்ம ஸ்வரூபத்தையடைய வேண்டுமென்கிற தீவ்ரமான இச்சையுடன் விடாமுயற்சி கொண்டு அதற்கு வேண்டியஸாதனங்களை அனுஷ்டிக்க வேண்டும். மானிடப் பிறவியைஅடைந்தவர்கள் செய்யவேண்டிய கார்யம் இதுதான். இதைச் செய்யாவிட்டால் ஆத்மஹத்திசெய்துகொண்டவனாகிறான்.

लब्ध्वा कथञ्चिन्नरजन्मदुर्लभं तत्रापि पुंस्त्वं श्रुतिपारदर्शनम् ।
यस्त्वात्ममुक्त्यै नयतेत मूढधीः सह्यात्महा स्वं विनिहन्त्य सद्ग्रहात् ॥

𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌰𑌜𑌨𑍍𑌮𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌪𑍁𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌪𑌾𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 । 𑌯𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌨𑌯𑌤𑍇𑌤 𑌮𑍂𑌢𑌧
𑍀𑌃 𑌸𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌹𑌾 𑌸𑍍𑌵𑌂 𑌵𑌿𑌨𑌿𑌹𑌨𑍍𑌤𑍍𑌯 𑌸𑌦𑍍𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ।

எவன் அடைவதற்கு முடியாததாயும், பல ஜன்மாக்களில் விசேஷமாகச் செய்யப்பட்ட புண்யஸமூஹங்களால் அடையத்தகுந்த இம்மானிடப் பிறவியை மிகவும் சிரமப்பட்டுப் பெற்று, அதிலும் புருஷனாக ஜனித்து வேதசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து ஆத்மமுக்தியின்பொருட்டு அதாவது ஸம்சாரபந்தத்திலிருந்து விடுபடுவதின் பொருட்டு, முயற்சி செய்யவில்லையோ? அந்த முட்டாள் எதைப் பெறவேண்டுமோ, அதைப் பெறாமல் அனாத்மபதார்த்தங்களில் ஆசைகொண்டு அவைகளை கிரஹிப்பதால் ஆத்மஹத்தி என்கிற மஹாபாதகத்தைச் செய்தவனாகிறான். என்றும்.

इतः कोन्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ।
दुर्लभं मानुषं देहं प्राप्य तत्रापि पौरुषम् ॥

**இத: கோந்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்தே ப்ரமாத்யதி |**
**துர்லபம் மாநுஷம் தேஹம் ப்ராப்ய தத்ராபி பௌருஷம் ||**

கிடைப்பதற்கு அரிதிலும் அரிதான மனுஷ்ய ஜன்மாவையும், அதிலும் புருஷனாகவும், ஜனித்த ஒருவன் தான் அடையவேண்டிய வஸ்து இன்னதென்று நன்கு உணராமல் அநாத்ம வஸ்துக்களில் மோகம் கொண்டு காலம் கழித்து மோசம்போனால் இவனைக் காட்டிலும் மூடாத்மா வேறு யார் இருக்கிறான் என்றும், ஸ்ரீ பகவத்பாதாளே வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் நல்லது கெட்டது, பாபம், புண்யம், சுகம், துக்கம் என்கிற பகுத்தறிவை அடைந்த நாம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைய எத்தனிக்க வேண்டியது அவச்யம் என்று அறிவிக்கப்படுகிறது.

மானிடராக அவதரித்தவர்கள் ஆத்மஸாக்ஷாத்காரத்தைப் பெறவேண்டியது முக்கியமென்று நிரூபிக்கப்பட்டது உண்மையே; அதை எவ்விதம் பெறுவது? ஸாதனங்கள் எவை? என்பதை அறிவிக்கிறார்.

**निजगृहात्तूर्णं विनिर्गम्यतां ।** நிஜக்ருஹாத்தூர்ணம் விநிர்கம்யதாம்

உத்தமமான பதவியை அடைவதற்கு மிகவும் இடையூறாயிருக்கும் புத்திரன், தனம், க்ஷேத்திரம் பசு, முதலான அனாத்ம வஸ்துக்களால் நிரம்பியதும், பலவிதத்திலும் சித்தத்திற்கு மோஹத்தையுண்டுபண்ணிக்கொடிய கஷ்டங்களைக் கொடுக்கும் கிரஹமென்கிற பந்தஸ்தானத்திலிருந்தும் வெகு சீக்கிரமாக வெளியிற் சென்றுஸத்குருக்களுடையசரணகமலங்களை அடைந்து விதிப்படி உபதேசம்பெற்று அவர்கள் ஆக்ஞைப்படி அனுஷ்டிப்பதே சிறந்த ஸாதனமாகும். கிரஹம் என்றால்

**न गृहं गृहमित्याहुर्गृहिणी गृहमुच्यते ।**

**ந க்ருஹம் க்ருஹமித்யாஹுர்க்ருஹிணீ க்ருஹமுச்யதே |**

என்கிற ஸ்மிருதியின் அபிப்பிராயப்படி பத்நீ என்று பொருள். ஸம்ஸாரமென்கிறவிருக்ஷத்திற்கு ஸ்திரீகளே விதைகளாகிறார்கள் அவர்களால்தான் அந்தவிருக்ஷம்விருத்தியாகி அனேககஷ்டங்களை உண்டுபண்ணுகின்றது. அவ்வித ஸ்திரீயினிடத்திலிருக்கும் ஸகல இச்சையையும் அறவே விலக்கவேண்டும். மற்ற எதையும் சுலபமாய் விலக்கலாம். இதை விலக்குவதுதான் மிகவும் சிரமமான காரியம். இக்கருத்தையே,

मत्तेभकुम्भदळने भुवि सन्ति धीराः केचित्प्रचण्डमृगराजवधेऽपि दक्षाः ।
किन्तु ब्रवीमि बलिनां पुरतः प्रसह्य कन्दर्पदर्पदळने विरळा मनुष्याः ॥

𑌮𑌤𑍍𑌤𑍇𑌭𑌕𑍁𑌮𑍍𑌭𑌦𑌳𑌨𑍇 𑌭𑍁𑌵𑌿 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑌚𑌣𑍍𑌡
𑌮𑍃𑌗𑌰𑌾𑌜𑌵𑌧𑍇𑌽𑌪𑌿 𑌦𑌕𑍍𑌷𑌾𑌃 । 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 𑌬𑌲𑌿𑌨𑌾𑌂 𑌪𑍁𑌰
𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌦𑌰𑍍𑌪𑌦𑌳𑌨𑍇 𑌵𑌿𑌰𑌳𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 ।

உலகில் மதங்கொண்ட யானையினுடைய மஸ்தகத்தைப் பிளப்பதில் சக்திவாய்ந்த தீரபுருஷர்களிருக்கிறார்கள். மற்றும் சில வீரர்கள் மிகவும் பராக்ரமத்தோடு கூடிய ஸிம்மத்தை வதம் செய்வதிலும் சமர்த்தர்களாயிருக்கிறார்கள். மன்மதனுடைய கொழுப்பை அடக்குவதில் சக்திபொருந்திய மனிதர்கள் மிகவும் அற்பமாகத்தான் இருக்கிறார்கள் என்று ஒரு பெரியார் கூறியிருக்கிறார். ஆகையால் எவ்வளவு சிரமமாயிருந்தாலும் ஸ்திரீ விஷயமான இச்சையையும், அறவே விலக்கிவிட்டுத் திடமான வைராக்யத்துடன் வெளிவந்து ஸத்குருவையடையவேண்டுமென்றுபொருள்

இதினால் வேதாத்தியயனம் அவச்யம் செய்ய வேண்டுமென்றும் பிறகு அதில் கூறியபடி ஸ்வகர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டும் என்றும்அவ்விதம் அனுஷ்டிக்கப்படும் உத்தமமான பலத்தை அளிக்கும் கர்மாக்களை துச்சமான ஐஹிகபலத்தையுத்தேசித்து அனுஷ்டிக்கக்கூடாதென்றும். அத்யயனம் செய்த வேதமந்திரங்களால் ஸ்ரீ பரமேசுவரருக்கு வந்தனம், அபிஷேகம், அர்ச்சனம், முதலான ஆராதனங்களைச் செய்து அவருடைய அனுக்கிரஹத்தைப் பெற வேண்டுமென்றும், ஆபாஸமான விஷயசுகங்களில் விருப்பம் வைக்கக்கூடாதென்றும், இவ்விதமிருந்தால் ஸகல பாபங்களும் விலகிவிடுமென்றும், ஸகல கஷ்டங்களுக்கும் காரணமான ஸம்சாரத்தில் வெறுப்புஎற்பட்டு வைராக்யமுண்டாகுமென்றும், உடனே ஆன்மஞானத்தைப்பெறவேண்டுமென்கிற விருப்பம் உண்டாகுமென்றும் அதற்காக ஸத்குருவையடைந்து உபதேசம் பெற்றால் உத்தமமான மோக்ஷசுகத்தை அடையலாமென்றும, முறையே । அறிவிக்கப்படுகின்றது.

சுபம்!

உபபத்திராதிபர்.

# ஓர் விக்ஞாபனம்.

நாங்கள் முற்காலத்தில் செய்த புண்ய விசேஷத்தால் ஸ்ரீ ஜகத்குருகாஞ்சிகாமகோடிபீடாதிபதிஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் மஹாசன்னிதானத்தின் விஜயமும், தரிசனமும், அமிருதவருஷ உபன்யாசத்தால் திவ்ய ஆனந்தமும், அடைந்தோம். ஒவ்வொரு சமீபகிராமங்களிலும் விஜயம் செய்து நித்யகர்மமே முக்கியமாக நாம் செய்து வரவேண்டிய காரியமென்று பாமரர்களுக்கும் பதியும்படி உபந்யாஸரூபமாக அனுக்கிரஹம் செய்து வருவதிலிருந்து அவ்வுபதேசமானது சுக்லபக்ஷச் சந்திரனைப் போல் விருத்தி அடைந்து வருகிறது. இச்சமயம் நமது மத சம்பந்தமாகப் பல அரிஷ்டங்கள் உண்டாயிருக்கும் விஷயத்தையும், அவ்விஷயமாக ஆங்காங்கு செய்துவரும் மஹாஜனங்களின் பெரும் முயற்சிகளையும், ஜனங்களறியவேண்டியதுமிகவும்அத்யாவச்யம் இவ்விஷயத்தில் 'ஹரி ஹர பக்த ஸமூக' மஹாஜனங்களின் சிறு விக்ஞாபனம் ஒன்று இருக்கிறது.

1. ஸ்ரீமதாசார்ய அனுக்ரஹம் பெற்று வெளி வந்து உலாவும் 'ஆரியதர்மம்' என்ற பத்திரிகையானது தற்காலம்போல் எக்காலத்திலும் நமது உபதேசக்கிரந்தமாகப் பிரகாசிக்க வேண்டுமென்றும் அதால் பிரசுரம் ஆகும் விஷயங்கள் மிகமேன்மைபொருந்தியதாக இருக்கவேண்டுமென்றும் சாமான்ய பத்திரிகையைப் போல லௌகிக விஷயங்களையே பெரும்பாலும் தாங்கி நிற்காமலிருக்க வேணுமென்றும், இன்னும் ஒருபங்கு கூடச்சேர்த்துப் பெரிதாக நடத்தவேண்டுமென்றும், இப்பத்திரிகைஒன்று நடந்து வருவதைப் பெரும்பாலும் அறியாதவர்கள் அதிகமாகவே இருக்கலாமென்றும் இப்பத்திரிகை விஷயமாகஅதன் நோக்கத்தையும், அதன் சாராம்சத்தையும், ஆசாரியானுக்கிரஹம் பெற்று ஸ்ரீமுகம் பிரசாரம்செய்து வரும்வித்வான்களின்மூலமாகஅறிவிக்கச்செய்து வரவேண்டுமென்றும் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

K. வீரமணிவாத்தியார்,
கோட்டாரக்கரை.

# விளம்பரம்.

ஸ்ரீ சங்கராசாரியாள் திருவருளை முன்னிட்டுத்தஞ்சைஜில்லா மாயவரம் தாலூக்கா தரங்கம்பாடிக்கு அடுத்த தில்லையாடியில் "தில்லைவனம் ஸ்ரீ பிருகன்னயகி வேதபாடசாலை" யென்னும்நாம தேயத்துடன் ஒரு பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு, அதில் அப்யஸிக்கிற மாணக்கர்களுக்கு அன்னபானதிகளுக்குப் பிரத்யேகமாக செலவில்லாமல் ஏற்பாடு செய்து இருப்பதுடன் கவர்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டமகா-ா-ஸ்ரீ K சாமிஅய்யர் அவர்கள் மானேஜ்மெண்டில் இருக்கிற தில்லையாடிஸ்கூலில் முதல், இரண்டு, மூன்றுபாரங்களுக்குச் சரியான 6-வது, 7-வது, 8-வது வகுப்புகளில் சேர்த்துப்பள்ளிக்கூடச் சம்பளம் இல்லாமல் இரண்டாம் படிப்பாக ஆங்கிலமும் கற்பிக்க ஏற்பாடுசெய்து இருப்பதால் 10-வயதுக்குக் குறையாமல் உபநயனமான பிராமண மாணக்கர்கள் 1928ஹு ஜுலைமீ 15உக்குள் மனுச் செய்துகொண்டால் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். முதல் பாரத்துக்குத் தகுதியான பிள்ளைகளுக்கு வருஷத்திற்கு 24-ரூபாயும் (இருபத்திநான்கு) இரண்டாவதற்கு 36-ரூபாயும் (முப்பத்தாறும்) மூன்ருவது பாரத்திற்கு 48 ரூபாயும் (நார்ப்பத்தெட்டும்) வேதபாடசாலைக்குச் செலுத்த வேண்டும் ஆரம்பத்தில் ரூபாய் மூன்று பிரவேசக்கட்டணம் செலுத்தவேண்டும் தாங்கம்பாடிக்கடுத்த தில்லைவனம் ஸ்ரீபிரகன்னயகி வேதபாடசாலை ஸ்தாபகர் மகா-ா-ஸ்ரீ T. A. ராமசுப்ரமணிய அய்யர் அவர்களுக்கு மனுச் செய்துகொள்ளவேண்டும். மற்ற விபாங்கள் நேரில்.

தில்லையாடி பள்ளிக்கூடம் மானேஜர்,
K. சாமி அய்யர்.
வேதபாடசாலை போர்டிங் ஸ்தாபகர்,
T. A. ராமசுப்ரமணி அய்யர்.

---

## வட-ஆற்காடுஜில்லா வைதிகமஹாஸபை.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் உத்திரவுபடி சென்னை, செங்கல்பட்டு இவ்விரண்டு

நோக்கத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த பல மேனாட்டார் உண்மை அறியாது போயினர், என விரிவாஹப் பேசினார். சேஷகிரிசாஸ்திரிகள் ஆமோதிக்கையில் முக்கால்மணி நேரம் பேசினார். அத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

டாக்டர் கோர் கொண்டுவந்திருக்கும் "சில காரணங்களைக் காட்டி விவாஹம்பண்ணிய தன் புருஷன் கோர்ட்டு மூலம் விலக்கி மற்றோர் புருஷனை மணக்கலாமெனப்பொருள்கொண்ட டெஸலூஷன் பில்லை இம்மகாசபை இது மதச்ருதிஸ்மிருதி ஸதாசாரங்களுக்கு விரோதமெனக் கண்டித்து இதுபோன்ற சட்டங்கள் சபையில் வாராவண்ணம் தடுக்கும்படி அரசாங்கத்தை வேண்டுகிறது என்ற தீர்மானத்தை ஸ்ரீவத்ஸ சர்மா அவர்கள் ப்ரேரிக்கையில் நாம் மத ஊக்கமில்லாமலிருப்பதால் வந்த கேடிது. கொஞ்சம் நன்மையைக் கோறி இடம்கொடுத்தால் இனி சிராத்தம் செய்தால் 6-மாதசிக்ஷை, நெற்றிக்கணிந்தால் 2-மாத சிக்ஷை, ப்ரதிதினம் 2-சேர் மாம்ஸம் சாப்பிடாவிட்டால் 4-மாத சிக்ஷை, என பற்பல சட்டங்கள் தோன்றக்கூடும் என்பதற்கு இதுவே தக்க ஸாக்ஷியம். மேனாடு ஒதுக்கிய அநாகரிகத்தை நம் நாடு நாகரீகமாகக்கொள்கிறது. "டைவோர்ஸ்" எனும் ஆபாஸத்தை பத்திரிகையில் பிரசுரம் செய்தால் உலகம் சிரிக்குமென அதைத் தடுத்து விட்டனர். நமது நாட்டின் உத்தம நோக்கமான மோக்ஷத்தையும் அதற்குமார்க்கமாக அமைக்கப்பட்ட உண்ணல், உடுத்தல், உறங்கல் மணத்தல் முதலிய நித்யகர்மாக்களின்நோக்கத்தையும் நன்குணரவேண்டும்என சுருக்கமாகவும், விளக்கமாகவும் பேசினார். கிருஷ்ணமூர்த்தி அய்யர் பிஏ., எல்.டி. இதை ஆதரித்துப்பேச அது ஏகமனதாக நிறைவேறிற்று.

மீமாம்ஸா கேஸரி ஸ்ரீ சின்னசாமிசாஸ்திரிகள் காசிஹிந்து யுனிவர்ஸிடி ப்ரவஸரை ராஜப்ரதிநிதியிடம் தூதுசெல்ல இஜ்ஜில்லா பிரதிநிதியாகவும் பத்மநாபராவ் அவர்களை சென்னை கவர்னரிடம் தூதுசெல்லவும் இச்சபை தேர்ந்தெடுக்கிறது.

இத்தீர்மானங்களை வைச்ராய் கவர்னர் கலெக்டர் இஜ்ஜில்லாவின் சென்னை டில்லி சட்டசபை ப்ரதிநிதிகளுக்கும் பத்திரிகைகளும் அனுப்பத் தலைவருக்கு அதிகாரமளிக்கிறது என்றதை ஸ்ரீநிவாசய்யர் எல்.டி. ப்ரேரிக்க மற்றோர் வக்கீல் ஆமோதிக்க ஏகமனதாக அதுவும் நிறைவேறிற்று.

ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுக்கும், ஸபைத்தலைவருக்கும் ஸபையோருக்கும், உபன்யாஸகர்களுக்கும், ஸ்ரீமடமதிகாரிக்கும், வந்தனோபசாரம் சொல்லி ஸபை இனிதாகக்கலைந்தது. வக்கீல் எ. ராகவய்யாவர்கள்தான் நேரில் வரமுடியாவிடினும் தக்கவர்களுக்கு அழைப்பு அனுப்பியும் அம்மஹாநாட்டிற்கு வேண்டிய மற்றெல்லா ஸௌகரியங்களையும்முன்னின்று கவனித்தார். இதில் ஊக்கம் காட்டிய எல்லோருக்கும் ஆண்டவன் அருள் புரிவாராக.

---

## விவாஹவயதுமசோதா கண்டனக் கூட்டங்கள்.

7-6-28 இரவு 8-மணிக்குக் குடியாத்தம்பிராம்மணத்தெருவு ஸத்திரத்தில் ஓர் சபை கூடிற்று. முனிரத்னமய்யர் தலைமைபுகுந்து ஸ்ரீ சர்மாவின் உழைப்பை மெச்சி தற்காலத்தோன்றிவுள்ள சட்டம் சட்டத்தால் வருந்தீங்கு முதலியவைகளை விளக்கும்படி உபன்யசிக்கச் சொன்னார். சர்மா வழக்கப்படியே யாரார் எந்தெந்த விதமான கேள்விகளை கேட்பார்களோ அவைகளைத்தானே கேட்டுக்கொண்டு ஸமாதானங் கூறினார். இடையில் ஓர் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் எம். ஏ., எல்டி பத்துவயதிற்குள் மணப்போரை சிக்ஷிப்பதெனச் சட்டத்தை மாற்றி ஏன் உபயோகிக்கக் கூடாது. எனக் கேட்டார். இதனால் ஏதாவது கிஞ்சித்பலம் ஏற்பட்டாலும் இன்று இச்சட்டத்திற்கு இடமளித்தால் மற்றும் பற்பல சட்டங்கள் வந்துவிடுமாதலால் சட்டசபையில் மதச் சட்டங்களுக்கு இடமேயளிக்கலாகாது. வைணவர் அணியும், ஸ்ரீசூர்ணத்தை மேயோ என்ற அமெரிக்கமாது. சுக்ல ஸோணித ஸம்பந்தமென்று பரிஹஸித்தாள். இதைக்கொண்டு ஒருவர் ஸ்ரீசூர்ணமணிந்தால் 1-மாத சிக்ஷை எனச் சட்டம்கொண்டுவருவர். எனக் கூறவே இன்ஸ்பெக்டர் அதை அங்கீகரித்தார். தாலூக்காஆபீஸ் ஹெட்க்ளார்க் ஏ. வெங்கட்டரமணய்யர் கண்டனத் தீர்மானத்தைப் பிரேரிக்க சுப்ரம்மண்யய்யர் கிருஷ்ணசாமி அய்யர் ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறி எண்ணிறந்த கையெழுத்துக்களுடன் வைஸ்ராய்க்குஅனுப்பப்பட்டது.

விரிஞ்சிபுரம். டாக்டர் முத்துலெக்ஷ்மிக்கு வலதுபுஜமாயுள்ள ஜட்ஜ் விசுவநாத சாஸ்திரிகள்சொந்த ஊரானவிரிஞ்சீபுரத்தில் அவரது நிலத்தை ஆச்ரயித்திருப்பதால் அவர் கொள்கைப்படி அச்சட்டத்தை ஆதரிப்பவரே அதிகமிருப்பர் ஆங்கெனபலர் கூறினர். ஆயினும் ஸ்ரீ சர்மா விடாமுயற்சியுடன் அங்கு சென்று கிராமமணியமும் தாலூகாபோர்ட்டு முதலிய இடங்களில்அங்கத்தினராயுமிருந்த சிலரை நெருங்கினர். சட்டத்தை அவர்களால் ஆமோதிக்கவே யதிர்ச்சையாகத் தனது ஸ்கூல் பழைய மாணவனைக் கண்டு அவன் மூலமாக ஓர் பெருங்கூட்டத்தைக் கூடினர். வி. வெங்கட்டராமசாஸ்திரிகள் பி,ஏ., எல்.டி. தலைமை வஹித்தார் ஸ்ரீ சர்மா விஷயத்தை விளக்கிக் கூறவே எதிராயிருந்த சிலரிதில் சேர்ந்தனர். சிலர் விலகி தூரே நின்று விட்டனர். ராமசாமி அய்யர் டீசர் மார்க்கஸஹாயசாஸ்திரிகள் முதலியவர்கள் ஆமோதிக்கக் கண்டனத்தீர்மானம் நிறைவேறி கையெழுத்துக்கள்பல வாங்கப்பட்டன. ஸ்ரீ மார்க்கஸஹாயஸ்வாமி நன் மார்க்கத்திற்கு ஸஹாயம் புரிந்தால் இச்சபை விக்னமின்றி நடந்தது. ஆயினும் ஸ்ரீ விசுவநாதசாஸ்திரிகள் இங்கில்லாதது வருந்தத் தக்கதென்றும் அவர் வந்தபோது நீங்கள் ஒரு சபை இதேபோல்கூடவேண்டும் என்றும் ஸ்ரீ சர்மா கேட்டுக்கொண்டு வெளியூர் சென்றார்.

திருவாமாத்தூர் 14-6-28 மாலையில் ஸ்ரீ வேதபாராயணசாலையில் பிரும்மஸ்ரீ யாகதீக்ஷிதாவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஓர் சபை கூடிற்று. தலைவர் நாம் ஸ்வதர்மம் தவறியதால் இத்தீங்கு விளைந்ததெனக் கூறித் தீர்மானத்தைப்பிரேரிக்கும்படி கூறினர். வெங்கிடகிருஷ்ணதீக்ஷதர், ஜெயராம தீக்ஷதர், வேம்புதீக்ஷதர் பிரேரித்து ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறிற்று.

வெங்கந்தூர் தென்னாற்காடு ஜில்லாவில் தேசீயத்திலும் மத விஷயத்திலும் மிகச் சிறந்துநின்றமஹோபன்யாஸி கணபதி சாஸ்திரிகள் வசித்து வந்த வெங்கந்தூரில் 15-6 28 மாலை ஓர் சபை கூடிற்று காங்கிரஸ் காரியதரிசி வெங்கிட்டராயர் தலைமை வகித்தார். சர்மா விஷயத்தைவிளக்கவிசுவநாதய்யர் மணியம்கோதண்டராமய்யர்ஸதாசிவம் நரசிம்மன்முதலியபலராதரிக்கக்கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. பல கையெழுத்துக்கள் வாங்கி அனுப்பப்பட்டது.

கோகுலபாலசர்மா

# ஸ்திரீசுவதந்திர விமரிசம்.

மகாபரிசுத்தமான இப்பாரதகண்டத்தில் இந்த நூற்றாண்டில் தோன்றியிருக்கும் அதிசயங்கள் பலவற்றில் நம் தேசத்திய நாரீமணிகளின் பூர்வக்ஞானம், தூரதிருஷ்டி புத்திசாலித்தனம், இவைகளைப்பற்றி காலவித்தியாசத்தால் தற்காலம் கொஞ்சம் விமரிசிக்க வேண்டியதவசியமாயிருக்கிறது. சென்ற டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடந்த காங்கிரஸ் பந்தலுக்கருகில் அநேகம் ஸ்திரீரத்னக்கள் கூடி நடத்திய மீட்டிங்கில் நெடுங்காலமாகப் புருஷர்கள் தங்களைச் சிறையில் வைத்து விட்டதாயும் மேல்நாட்டு நாகரீம் தெய்வானுகூலமாய் பரவி வந்ததால் கொஞ்சம் நாம் விழித்துக்கொண்டோமென்றும் இனி நம்மை ஏமாற்ற முடியாதென்றும் இன்னும் கணக்கற்ற மொழிகளைப் பேசியதுடன் தங்களுக்கும் புருஷர்களுக்கும் இனி எவ்வித வித்தியாசமும் கூடாதென்றும் ஓட்டு சுவதந்திரம், கல்வி, உத்யோகம், புனர்விவாகம் தாயபாகம் ஸ்வீகார உரிமை சொத்து சுவாதந்திரியம் முதலிய சகலமும் உண்டாக வேண்டுமென்றும் தங்களுக்கு எவ்விதத்திலும் புருஷர்கள் கட்டளையிடக் கூடாதென்றும் சமையல் காலங்களில் பர்த்தாக்கள் சகாயம் செய்யவேண்டுமென்றும் மகாபதிவிரதைகளான அனசூயை அஹல்யை த்ரௌபதி சீதை ஸாவித்ரீ நளாயினீ (இன்னும் சில பேர்களை சொல்ல எக்காரணத்தாலோ தயங்கிவிட்டனர்.) முதலிய நம் முன்னோர்கள் இவ்வுலகில் பிறக்கவில்லையா? அவர்களை நாம் பின்பற்ற வேண்டாமா? அவர்களைப் போல் அதிசூரர்களாயும் புத்திசாலிகளாயும் உள்ள பிள்ளைகளை நாம் பெற்று வளர்க்கவில்லையா? மூன்காலத்து ஸ்திரீகள் ஸர்வ சுவதந்திரத்துடனும் பெருமையாகவும் விசேஷப்படிப்புள்ளவர்களாகவும் இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? இதோடு நாம் நின்றுவிடக் கூடாது இனி ஒவ்வொரு இடத்திலும் மீடிங்குகள் கூடி கூக்குரலிடவேண்டும். அப்போதுதான் அவர்கள் நம்முடைய வழிக்கு வருவார்கள். நெடுங்காலமானதால் நமக்கு சுவதந்திரத்தைக் கொடுக்க எளிதில் சம்மதிக்கமாட்டார்கள். சந்தாதாரர்களைச் சேர்க்கவேண்டும். மெம்பர்கள்பிரசிடெண்டுகள் ஏராளமாகத்தேவை எழுந்திருங்கள் என்று பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதாய் கேழ்வைப்பட்டு விசனிக்கிறோம். இந்த மீடிங்கில் ஸகல ஜாதி ஸ்திரீகளும் அபி

மானமுள்ளவர்களாயிருப்பதாயும்தெரிகிறது. முன்காலத்துஸ்திரீ களுக்கும் இவர்களுக்கும் உள்ள சரீர அமைப்பைக்கருதி நம் முன்னோர்கள் என்று வாய்க்கூசாமல் பேசுகிறார்களே தவிர அவர் களின் நடை உடை புத்தி விசாலம் முதலிய உத்தம குணங் கள் ஒன்றையும் இவர்கள் கவனித்ததாக ஏற்படவேயில்லை. இவர் களைப் படிக்கவேண்டாமென்று யாராவது தடுத்திருக்கிறார்களா? சொற்பம் படிக்கத் தெரிந்தவுடன் மேல்நாட்டு நாகரீகத்தை யுடைய காதல் நாவல்கள் அரபிக்கதைகள் முதலியவைகளில் காலத்தைப் போக்குகிறார்களே தவிர ராமாயணம் பாரதம் பாக வதம் முதலிய பகவத்ஸம்மந்தமான விஷயங்களைப்படித்து ஈசுவர பக்தியுடனிருப்பது ரொம்ப துர்லபமாயிருக்கிறது.

ராஜாங்கத்தார் ஓட்டு சுவதந்திரம் அளித்திருக்கிறார்கள்தேவை யானால்உத்தியோகமும்யோக்யதைக்குத்தகுந்தபடி கொடுக்கிறார் கள். புருஷர்கள் செய்யும் எக்காரியததையாவதுஇவர்களால்தனி த்துச் செய்யமுடியுமா? சொல்பவருமபடியுள்ள குடும்பத்திலும் புருஷன் அடையும் பிரயோஜனத்தைவிட ஸ்திரீகள் எட்டுமடங்கு அதிகமாக அடைகிறார்கள் என்பது வெளிப்படை. இவர்களைக் காப்பாற்றும் வேலிபோல் புருஷர்கள் இருந்து வருகிறார்கள் ஸகல சாஸ்திரங்களிலும் புராணங்களிலும ஸ்திரீகளுக்கு விசேஷ கௌரவம்கொடுத்து அவர்களைப்பெருமைப்படுத்தியிருக்கிறதுதச ரத சக்கிரவர்த்தியின் புதல்வான ராமஸ்வாமியானவர் சிறியதா யாரின் வலைக்குள்ளகபட்ட பிதாவின்வார்த்தையைப் பரிபாலனம் பண்ணக் காட்டுக்குப் போகும்போது ஸீதையை வரவேண்டா மென்று எவ்வளவோ சொல்லிக் கானகத்தில் நேரும் துக்கத்தை யும் பயத்தையும் எடுத்துரைத்தும கேளாமல் ஒரேபிடிவாதமாய்க் கூடவந்து முடிவுவரையில் தான்பட்ட கஷ்டம் தவிர அவர் அடை ந்த சிரமம் பூராவும் ஸ்திரீசுவதந்திரத்தால்வந்ததல்லவா? பிரசித் திக்கிரந்தமாகிய பாரதயுத்தம் பூராவும் ஸ்திரீ ஸ்வதந்திரத்தையே விசேஷமாயுள்ளது இன்னும் எண்ணிறந்ததிருஷ்டாந்தங்கள சாஸ் திரபூர்வமாய் நிரூபிக்கமுடியும். இவர்களை எப்போதும் தனித்து விடக்கூடாதென்றும் சுவதந்திரத்தால் இவர்களுக்கும் இவர்கள பாதிவ்ரத்யத்திற்கும் விசேஷ அனர்த்தம் விளையுமென்று இந்து சாஸ்திரம் பூராவும் முறையிடுகிறது. (இன்னும்வரும்)

தி. ந. தாததேசிகாசாரியார்